SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

**THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF COMMERCE (EXTERNAL) – 2011/2012**
HELD IN DECEMBER, 2013

## B. Com – 38 ORGANIZATIONAL BEHAVIOR

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

பின்வரும் விடைய ஆய்வினை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக?

திரு சில்வா தனது குழந்தைப்பருவத்தில் இருந்து ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக காணப்பட்டதுடன் தானாகவே வலுவினை பெற்றுக் கொண்டார்.

தூரதிஷ்டவசமாக அவர் குறைந்த சம்பளத்துடன் கூடிய தொழிலில் ஒன்றில் பெரிய தொழில்சாலையீல் வரிசை ஊழியராக அமர்த்தப்பட்டார். இது ஒரு ஆபத்தற்ற முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் அற்ற தொழிலாகும். அவர் பெரிய குடும்பம் ஒன்றிற்கு உதவி செய்ய வேண்டியவராக இருக்கின்றார். அவருக்கு சிறந்த வருமானமுடைய தொழில் தேவையாக உள்ளது. இத்திசை நோக்கிய அவரது அனைத்து முயற்சிகளும் வினாகவே உள்ளது. இவரது கௌரவத் தேவையானது கீழ் மட்டத்தில் உள்ளது. இவர் சொர்க்கயத்தில் முட்டாளாக வாழத் தொடங்கியுள்ளார்.

இவரது பலநாட்கள் பகல் கனவாகவே கழிகின்றன. ஆச்சரியப்படத்தகர்த வகையில் அவர் குற்ற செயல்களிலும் குடிபோதையிலும் விழுந்தார் இவர் தனது குடும்பத்தைப் பற்றி கவலையில் இருப்பதுடன் அழுத்தத்திற்கும் ஆளாகியுள்ளார். இத ஒரு சுற்றுவட்டம் இதில் இருந்து இவர் விடுபடவேண்டும் இந்த பயங்கர சூழலில் இருந்து விடுபட முடியவில்லை.

ஒரு நல்ல காலைப்பொழுதில் இவர் இவரது மேற்பார்வையாளரிடம் இருந்து ஆலோசனை பெற வேண்டி விரும்பினார். எனினும் அவரது மேற்பார்வையாளருடனான உறவு அவளவு நெருக்கமாக இல்லை. எனவே அவர் அவரது தொழில் சங்க தலைவரிடம் உதவி பெற்றார். தொழில் சங்க தலைவர் சில்வாவினுடைய சூழலை அனுதாபத்துடன் செவிமடுத்ததுடன் சில்வாவிற்கு இரக்கமான பாணியில் கூறினார். இந்த கம்பனியில் வேலை செய்வதில் எந்த பயனும் இல்லை எங்களுக்கு முகாமையில் தீர்க்கப்பட வேண்டியபல எண்ணற்ற பிரச்சினைகள் உள்ளன வேலை நிபந்தனைகள் உட்பட சம்பளம் நல்ல வேலை சூழலுக்காக ஒன்றுபட வேண்டியுள்ளது.

வினாக்கள்:

01 அ. இவ்விடய ஆய்வில் சில்வாவினால் முரண்பாட்டுக்கு உட்பட்டுள்ள வகிபாக அனுபவத்தின் தன்மையினை ஆய்வு செய்க.

(08 புள்ளிகள்)

ஆ. தொழிற்சங்க தலைவரால் முன்வைக்கப்பட்ட முரண்பாட்டு தீர்வுக்கான தந்தரஉபாய தீர்வுகள் யாவை?

(08 புள்ளிகள்)

இ. திரு சில்வாவிற்கு நீர் எவ்வாற ஆலோசனை கூறுவீர்

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ. நிறுவன நடத்தை என்பதன் மூலம் விளங்கி கொள்வது யாது? மற்றும் நடத்தை பற்றிய அறிவு முகாமையாளருக்கு ஏன் அவசியமாகின்றது.

(07 புள்ளிகள்)

ஆ. நிறுவன நடத்தையின் பிரதான கூறுகள் யாவை?

(06 புள்ளிகள்)

இ. நிறுவன நடத்தை சிக்கல் வாய்நத நடைமுறையாகும் இதன் முழுமையான வடிவத்தினை விளங்கிக் கொள்வது கடினமாகும்.

நிறுவன நடத்தை பற்றிய கற்க்கையின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துக?

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அ. நிறுவனமொன்றில் தனிநபர் நடத்தையின் காரணிகளை சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

ஆ. நபரொருவரது உடலியல் மற்றும் உளவியல் சார்ந்த வேறுபாடுகளை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

இ. முறைசார்ந்த மற்றும் முறைசாராத குழுக்களது நடத்தைகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. அ. பண்புக் கோட்பாட்டாளனது உறுதியான தலைவர் ஒருவரது தனிப்பட்ட உளவியல் மற்றும் உடலியல் பண்புகளை விளக்குகின்றது. மேற்கூறப்பட்ட கூற்றினை உண்மையான உலக தலைவர்களுடன் தொடர்புபடுத்தி விளக்குக.?

(08 புள்ளிகள்)

ஆ. ஏன் " Y " வகையான ஊழியர் நடத்தையானது "X" வகையான ஊழியர் நடத்தையினை விட முக்கியத்துவமானது.

(06 புள்ளிகள்)

இ. இரு காரணிக் கோட்பாட்டினையும் மஸ்லோவின் தேவைக்கோட்பாட்டினையும் வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. அ. தனிநபர் அழுத்தத்தின் விளைவுகள் யாவை? மற்றும் தனிநபர் அழுத்தத்தினை முகாமை செய்வதில் அடிக்கடி பயன்படுத்தக் கூடிய நுட்பங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

ஆ. தொடர்பாடல் வலை பின்னல் என்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

(06 புள்ளிகள்)

இ. வலு மற்றும் அரசியல் என்றால் என்ன? உதாரணம் தருக?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)